அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044-4212 4624, e-mail : orsk14@gmail.com

அ.எண் : 01 /2017
தேதி : 9.1.2017

## தமிழ்நாடு இந்திய மாநிலம்; தமிழர் நாங்கள் இந்தியர்கள்தாம்- மத்திய அரசுக்கு வலியுறுத்தல்.

## அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் நிறுவனத் தலைவர் ஆர்.சரத்குமார் அறிக்கை.

தொடர் பேச்சுவார்த்தையால் மீனவர்கள் விடுவிக்கப்பட்டவுடன், மீண்டும் இராமேஸ்வரம், கோட்டைப்பட்டினம் மீனவர்கள் சிறை பிடிப்பால், பிரதமரின் கோரிக்கைகளுக்கு இலங்கை அரசு செவி சாய்ப்பதில்லை என்று தெரிகிறது. மீனவர்கள் சிறைப்பிடிப்பு, மீனவர்கள் தாக்குதல் போன்ற தொடர் பிரச்சனைகளுக்கு வெளியுறவுத் துறை அமைச்சர் மூலம், இந்திய பிரதமர் - இலங்கை அதிபர் சந்திப்பை ஏற்படுத்தி, ஒரே கட்டமாக பேச்சுவார்த்தை நடத்தி நிரந்தர தீர்வு காண வழி செய்யவேண்டும்.

பிரதமர் அவர்கள், கருப்பு பணத்தை ஒழிப்பதற்காக ஒரே இரவில் அதிரடியாக நடவடிக்கை எடுத்தார். அந்த நடவடிக்கையினால், சாமானிய மக்கள் பல நிலைகளில் துன்பத்திற்கு உள்ளாகும் சூழ்நிலை ஏற்பட்டாலும், பொருளாதார சீர்திருத்தத்திற்காக அதிரடி நடவடிக்கை எடுக்கும் அளவிற்கு வலிமை பொருந்திய மத்திய அரசு ஏன் தமிழக மீனவர்களின் பாதுகாப்பை முன்னிறுத்த முடியாது?

அதேபோல், காவிரி நீர், ஜல்லிக்கட்டு போன்ற தமிழ்நாட்டின் அனைத்து பிரச்சனைகளிலும் மத்திய அரசு பாரபட்சமாக செயல்படுவது போல தெரிகிறது. தமிழ் நாடு என்ற மாநிலம் இந்தியாவில்தான் இருக்கிறது என்பதை மறந்துவிட்டனரோ என்றும் தோன்றுகிறது.

எனவே, பிரதமர் அவர்கள் கருப்பு பணம் போன்ற நடவடிக்கையில் காட்டும் அதிரடியை, தமிழக மீனவர்களின் உயிருக்கும் உடைமைக்கும் காட்டவேண்டும் என்றும், மீனவர் பிரச்சனைகளுக்கு ஒரே கட்டமாக, நிரந்தரமாக தீர்வு காணவேண்டும் என்றும் வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறேன்.

நன்றி, வணக்கம்

உழைப்பவரே உயர்ந்தவர்,
என்றும்அன்புடன்,

**ஆர்.சரத்குமார்**
நிறுவனத் தலைவர்